பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

10 03 2025 **MONDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஆன்மிகத்தின்மூலம், வலுவான, ஆரோக்கியமான சமூகத்தை கட்டமைக்க வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. ரயில்வே சட்டத்திருத்த மசோதாவை மாநிலங்களவையில் அத்துறைக்கான அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் இன்று தாக்கல் செய்தார்.

3. அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான இணையதளத்தில் இதுவரை 30 கோடியே 68 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பதிவு செய்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. ஹோலிப்பண்டிகையையொட்டி, 400-க்கும் மேற்பட்ட சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளதாக ரயில்வே தெரிவித்துள்ளது.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டி ஆட்டங்கள் மற்றும் ஒளிபரப்பின்போது, மதுபானங்கள் மற்றும் புகையிலை தொடர்பான அனைத்து விளம்பரங்களும் தடை செய்யப்பட வேண்டும் என்று மத்திய சுகாதார அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.

இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>

ஆன்மிகத்தின்மூலம் வலுவான, ஆரோக்கியமான சமூகத்தை கட்டமைக்க வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

ஹரியானா மாநிலம் **Hisar** –ல் இன்று நடைபெற்ற பிரம்மகுமாரிகள் அமைப்பின் பொன்விழா கொண்டாட்ட நிகழ்ச்சியில் அவர் பங்கேற்று பேசினார்.

ஆன்மிகத்தின்மூலம் கிடைக்கும் அமைதியினால் நாட்டின் வளர்ச்சிக்கு வித்திட முடியும் என்று திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

<<<<<>>>>>>

ரயில்வே சட்டத்திருத்த மசோதாவை மாநிலங்களவையில் அத்துறைக்கான அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் இன்று தாக்கல் செய்தார்.

ரயில்வே வாரியத்தின் அதிகாரத்தை மேலும் அதிகரிக்கும் நோக்கோடு, ரயில்வே சட்டம் 1989-ல் திருத்தங்கள் மேற்கொள்ளும் வகையில் இந்த மசோதா அமைந்துள்ளது.

இதுதொடர்பான விவாதத்தின்போது ரயில்வே வாரியம் முழுமையாக சுயாட்சி தன்மை கொண்டதாக இருக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு விவேக் தங்கா தெரிவித்தார்.

மேலும் மூத்த குடிமக்கள் மற்றும் பத்திரிகையாளர்களுக்கு ரயில்வே வழங்கி வரும் சலுகைகள் தொடர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதைத்தொடர்ந்து பேசிய பிஜேபி உறுப்பினர் திரு சுபாஷ் பராலா, இந்த மசோதாவானது ரயில்வேத்துறையின் செயல்பாடுகளை வெளிப்படையானதாகவும், நம்பகத்தன்மைமிக்கதாகவும் ஆக்கும் என்று குறிப்பிட்டார்.

<<<<<>>>>>>

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான இணையதளத்தில் இதுவரை 30 கோடியே 68 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பதிவு செய்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மக்களவையில், இதுதொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்கு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை இணையமைச்சர் திருமதி ஷோபா கரந்தலாஜே எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் இதனை தெரிவித்துள்ளார்.

இத்தளத்தில் பதிவு செய்துள்ள பணியாளர்களில் 53 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் பெண்கள் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆயுஷ்மான் பாரத், காப்பீட்டுத்திட்டங்கள் உள்ளிட்ட மத்திய அரசின் 13 திட்டங்கள் இத்தளத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதாக திருமதி ஷோபா கரந்தலாஜே தெரிவித்துள்ளார்.

**<<<<<>>>>>>**

இந்தியா – கம்போடியா இடையிலான மூன்றாவது வெளியுறவு அமைச்சக ஆலோசனைக்கூட்டம் கம்போடியாவின் **'Siem Reap'** நகரில் இன்று நடைபெற்றது.

பாதுகாப்பு ஒத்துழைப்பு, வர்த்தகம் மற்றும் முதலீடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவை ஆய்வு செய்யும் விதமாக நடைபெற்ற இக்கூட்டம் இரு நாடுகளுக்கும் பரஸ்பரம் திருப்தி அளிக்கும் விதமாக அமைந்தது என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது

இதுதொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் திரு **'Jaideep Mazumdar,** டாக்டர் **'UN Kheang** தலைமையில் இருநாட்டு பிரதிநிதிகள் பங்கேற்ற இக்கூட்டத்தில், சுகாதாரம், டிஜிட்டல் தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றில் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கான முடிவு எட்டப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**<<<<<>>>>>>**

குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டம் கிராமப்புறங்களில் உள்ள 80 சதவீதத்திற்கும் மேற்பட்ட வீடுகளில் செயல்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய ஜல்சக்தித்துறை அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இதுதொடர்பான கேள்விக்கு அவர் அளித்த பதிலில், 2019-ஆம் ஆண்டு 16 சதவீதம் வீடுகளில் மட்டுமே குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டிருந்ததாக கூறியுள்ளார்.

உலக சுகாதார நிறுவனம் வகுத்துள்ள வரையறைகளின்படி, செயல்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்தின்மூலம், நீர்மூலம் தொற்றும் நோய்களால் நான்கு லட்சத்திற்கும் மேற்பட்டோர் பாதிப்புக்கு உள்ளாவது தடுக்கப்பட்டுள்ளதாக திரு சி ஆர் பாட்டீல் தெரிவித்துள்ளார்.

**<<<<<>>>>>>**

மத்திய அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரின் பிரிட்டன் பயணம் இருநாடுகளுக்கு இடையேயான உறவை மேலும் வலுப்படுத்தியிருப்பதாக மத்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்த பயணத்தின்போது பிரிட்டன் பிரதமர் திரு **Keir Starmer** உள்ளிட்ட அந்நாட்டு தலைவர்கள் பலரை வெளியுறவு அமைச்சர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியல், பொருளாதாரம் மற்றும் இருநாட்டு மக்களின் ஒருங்கிணைப்பை வலுப்படுத்தும் விதமாகவும், மண்டல மற்றும் சர்வதேச பிரச்சினைகள் தொடர்பான கருத்து பரிமாற்றங்களை விரிவாக மேற்கொள்ளும் விதமாகவும் திரு ஜெய்சங்கரின் பயணம் அமைந்ததாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

இந்தியாவும் - மொரிஷியஸும் வரலாறு, புவியியல் மற்றும் கலாச்சார ரீதியிலான பிணைப்பை கொண்டிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மொரிஷியஸ் நாட்டுக்கு இரண்டு நாள் பயணமாக செல்லும் அவர், பயணத்திற்கு முன் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இருநாடுகளும் ஜனநாயகத்தின்மீது மிகுந்த மதிப்பினை கொண்டிருப்பதாகவும், பன்முகத் தன்மையின் வலிமையை கொண்டாடும் வகையில் செயல்பட்டு வருவதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

கடந்த பத்தாண்டுகளில் இருநாட்டுகளுக்கும் இடையேயான பிணைப்பு குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டியிருப்பதாகவும், கடல்சார் வணிகத்தில் நம் நாட்டோடு நெருங்கிய உறவை மொரிஷியஸ் பேணி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மொரிஷியஸ் நாட்டு தலைவர்கள் உடனான தமது பேச்சுக்கள் ஆக்கப்பூர்வமானதாக அமையும் என்றும், பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எட்ட உதவும் என்றும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

நாடு முழுவதும் சாலை கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இதன் காரணமாக, சரக்கு போக்குவரத்துக்கான செலவினங்கள் அடுத்த இரண்டாண்டுகளுக்குள் வெகுவாக குறையும் என்றார்.

வரிச்சலுகைகளை தொழில்துறையினர் கோருவதை தவிர்க்குமாறு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதில் வரிவருவாய் முக்கிய பங்கு வகிப்பதாகவும் திரு நிதின்கட்கரி கூறினார்.

<<<<<>>>>>

ஹோலிப்பண்டிகையையொட்டி, 400-க்கும் மேற்பட்ட சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளதாக ரயில்வே தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வடக்கு ரயில்வே இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், பயணிகளின் வசதி மற்றும் பாதுகாப்புக்காக பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களின் தேவையை பொறுத்து, கூடுதலாக சிறப்பு ரயில் இயக்க ஏற்பாடு செய்யப்படும் என்றும் வடக்கு ரயில்வே கூறியுள்ளது.

<<<<<>>>>>>

ஜார்கண்ட் மாநிலம் **Garhwa** மாவட்டத்தில் இன்று நேரிட்ட பட்டாசு வெடி விபத்தில், இரண்டு குழந்தைகள் உட்பட ஐந்து பேர் உயிரிழந்தனர்.

அங்குள்ள பட்டாசு கடை ஒன்றில் திடீரென்று தீ பரவியதால் இந்த விபத்து நேரிட்டதாகவும் அதனைத்தொடர்ந்து, கடைக்குள் இருந்த பட்டாசுகள் வெடித்ததில் அங்கிருந்த மக்கள் பாதிப்புக்கு உள்ளானதாகவும் அம்மாநில காவல்துறை தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு அம்மாநில ஆளுநர் திரு சந்தோஷ் குமார் கங்குவார் மற்றும் முதலமைச்சர் திரு ஹேமந்த் சோரன் ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

<<<<<>>>>>>

மகா கும்பமேளாவில் பங்கேற்ற மக்கள் புனித நீராடிய திரிவேணி சங்கமம் குளிப்பதற்கு உகந்த வகையில் இருந்ததாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மக்களவையில் பேசிய மத்திய சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு பூபேந்திர யாதவ், மத்திய மாசுகட்டுப்பாட்டு வாரியம் மகா கும்பமேளாவின்போது பிரயாக்ராஜில் உள்ள கங்கை நதி நீரின் தரம் குறித்து பல்வேறு இடங்களில் ஆய்வு மேற்கொண்டதாகவும், அதன் முடிவில் சமர்ப்பித்த அறிக்கையில் இத்தகவலை குறிப்பிட்டுள்ளதாகவும் கூறினார்.

கடந்த 2022-ஆம் ஆண்டு முதல்தற்போது வரை கங்கை நதியை சுத்தப்படுத்தும் திட்டத்திற்காக மத்திய அரசு 7 ஆயிரத்து 421 கோடி ரூபாயை வழங்கியுள்ளதாகவும் திரு பூபேந்தர் யாதவ் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

பிரிட்டன் நாட்டை சேர்ந்த இரண்டு அதிகாரிகள் உளவு பார்த்ததாக கூறி, இரண்டு வாரங்களுக்குள் அவர்கள் வெளியேற வேண்டும் என்று ரஷ்யா உத்தரவிட்டுள்ளது.

தங்கள் நாட்டு பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில், அவர்கள் செயல்பட்டதாகவும், அவர்களை பற்றிய தவறான தகவல்களை சமர்ப்பித்திருந்ததாகவும், ரஷ்யா வெளியுறவு அமைச்சகம் குற்றம் சாட்டியுள்ளது.

<<<<<>>>>>>

சிவில் விமான போக்குவரத்துத்துறை இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சி கண்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், உள்நாட்டிலேயே விமானங்களை தயாரிப்பதற்கு ஊக்கம் அளிக்கப்படுவதாக தெரிவித்தார்.

<<<<<>>>>>>

ஐ பி எல் கிரிக்கெட் போட்டி ஆட்டங்கள் மற்றும் ஒளிபரப்பின்போது, மதுபானங்கள் மற்றும் புகையிலை தொடர்பான அனைத்து விளம்பரங்களும் தடை செய்யப்பட வேண்டும் என்று மத்திய சுகாதார அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, ஐ பி எல் தலைவர் திரு அருண்சிங் துமாலுக்கு, மத்திய சுகாதார சேவைகள் தலைமை இயக்குனர் எழுதியுள்ள கடிதத்தில், ஐ பி எல் போட்டி நடக்கும் இடங்கள் மற்றும் நிகழ்ச்சிகளில் மேற்கண்ட பொருட்கள் விற்கப்படுவது தடை செய்யப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

**<<<<<END>>>>>>**